
# 4 இலங்கையும் ஒல்லாந்தரும்

- ★ ஒல்லாந்தர் இலங்கைக்கு வரும் போது இங்கு நிலவிய அரசியல் நிலைமை.
- ★ ஒல்லாந்தர் தமது அதிகாரத்தை இந்நாட்டில் நிலை நாட்டுதல்.
- ★ ஒல்லாந்தருக்கும், கண்டி இராச்சியத்துக்குமிடையிலான தொடர்பு.
- ★ ஒல்லாந்தரது அரசியல், பொருளாதார, பண்பாட்டு, சமூக நடவடிக்கைகள் என்பவற்றை இப்பாடத்தைக் கற்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

## ஒல்லாந்தரது இலங்கை வருகை




ஒல்லாந்தரின் கீழைத்தேய பயணப்பாதை

போர்த்துக்கேயரைப் போலவே ஒல்லாந்தரும் வர்த்தகப் பொருட்களைப் பெறும் நோக்கத்துடனேயே கடற் பிரயாணங்களை மேற்கொண்டனர். வாசனைத் திரவியங்கள் கிடைக்கும் இடங்களை தமதாக்கிக் கொள்ள இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, போர்னியா, மலேசியா போன்ற நாடுகளிலிருந்து மிளகு, கறுவா, ஏலம், கராம்பு, சாதிக்காய் போன்ற வாசனைப் பொருட்களையும் இரத்தினக்கற்கள், முத்து, யானைத் தந்தம், பீங்கான் பொருட்கள், துணிவகைகளையும் பெறுவதற்கே அவர்கள் கீழைத்தேசங்களுக்கு வந்தனர். ஒல்லாந்த மன்னனின் அனுமதியுடன் அவர்கள் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தை நிறுவினர். இந்த வர்த்தக சங்கம் வர்த்தகம் தொடர்பான செயல்களில் ஈடுபட்டதுடன், வர்த்தகப் பொருட்கள் பெறப்பட்ட இடங்களையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

இலாபம் பெறுவதே ஒல்லாந்தரின் பிரதான நோக்கமாக இருந்தது. கறுவா விளையும் பரந்த நிலப்பரப்பு இலங்கையில் காணப்பட்டதால் இந்நாட்டின்மீது அவர்கள் விசேட கவனம் செலுத்தினர்.



சாதிக்காய்



ஏலம்



கறுவா




மிளகு

## ஒல்லாந்தர் வரும்போது இலங்கையின் அரசியல் நிலை

16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இந்நாட்டின் கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்தனர். கரையோரப் பகுதி போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழிருந்த அதே வேளையில் கண்டி இராச்சியம் சுதந்திர அரசாக விளங்கியது. தமன்கடுவ, நுவர கலாவிய, பிந்தன்ன, ஹேவாஹெட்ட, உடுநுவர, ஹரிஸ்பத்துவ, தும்பறை உட்பட நாட்டின் முழு நிலப்பரப்பில் நான்கின் மூன்று பகுதி கண்டி இராச்சியத்துக்கு உட்பட்டதாக இருந்தது.

இவ்வாறு பரந்த நிலப்பரப்பை உள்ளடக்கிய கண்டி இராச்சியம் சுதந்திர அரசாக இருப்பது போர்த்துக்கேயரைப் போலவே, ஒல்லாந்தருக்கும் பிரச்சினையாகவே இருந்தது. தாம் விரும்பியபடி தமது சமய, வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள கண்டி இராச்சியம் அவர்களுக்குத் தடையாக இருந்தது. எனவே கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற ஒல்லாந்தர் அடிக்கடி முயன்றனர்.




ஒல்லாந்தரது ஆட்சிப் பரம்பல்

கண்டி இராச்சிய மன்னனான முதலாம் விமலதர்மசூரியன் போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து அகற்றுவதற்கு முயன்றான். போர்த்துக்கேயரைத் துரத்துவதற்கு இந்து சமுத்திரத்தில் கடற் படையைப் பலப்படுத்த வேண்டி இருந்தது. 16 ஆம் நூற்றாண்டு முதல் இந்நாட்டின் ஆட்சியாளர்கள் கள்ளிக்கோட்டை சமோரின் போன்றோரின் உதவியை நாடிய போதிலும் அவை போதுமானதாக இருக்கவில்லை. எனவே சிறந்த கடற்படையுடைய ஐரோப்பிய இனத்தவரின் உதவியைப் பெறுதல் முக்கியமானது. எனக் கருதப்பட்டதால் ஒல்லாந்தரின் உதவி நாடப்பட்டது.

## ஒல்லாந்தரின் இலங்கை வருகை



ஸ்பில்பேகன் முதலாம் விமலதர்ம சூரியனைச் சந்தித்தல்.

கி.பி 1602இல் மட்டக்களப்பிற்கு வந்த ஒல்லாந்தக் கடற்படைத் தளபதி ஸ்பீல்பேஜன் கண்டி மன்னன் முதலாம் விமலதர்மசூரியனுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக கண்டி அரச மாளிகைக்குச் சென்றான். கீழ்நாட்டு வர்த்தகம் தொடர்பாகப் பேசுவதற்கு வர்த்தக சங்கத்தால் தான் அனுப்பப்பட்டதாக அவன் கூறினான்.

ஒல்லாந்த மன்னனால் (ஓரேஞ் வில்லியம்) அனுப்பப்பட்ட கடிதத்தையும் அவன் அரசனிடம் கொடுத்தான். போர்த்துக்கேயரை அகற்றக் கடற்படை வலிமையற்றிருந்த வேளையில் கடற்படை வலிமை பொருந்திய ஓர் இனத்தவரின் உதவி கிடைத்தமையை இட்டு மன்னன் மகிழ்ச்சி அடைந்தான். எனினும் இந்தத் தூதுப் பயணத்தின் போது எவ்வித முடிவும் எடுக்க முடியவில்லை.



சி. போல் த வார்ட்

இதனைத் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு இடையில் வேறொரு தூதுக்குழு முதலாம் விமலதர்மசூரியனைச் சந்தித்தது. அதன் தலைவராக இருந்தவர் சீ போல்ட் த வார்ட் என்பவராவார். மன்னன் அவரை செங்கடகலயில் மிக ஆரவாரமாக வரவேற்றதுடன், போர்த்துக்கேயரைத் துரத்துவதற்கு இரு பகுதியினரும் எவ்வாறு செயற்பட வேண்டும் எனவும் கலந்துரையாடப்பட்டது. இந்தக் குழுவினரின் தகாத நடவடிக்கையால் பின்னர் இவர்கள் கொல்லப்பட்டனர். ஒல்லாந்தரின் உதவியை நாடும் முயற்சியும் தோல்வி கண்டது.



ஒல்லாந்த வர்த்தக சங்கக் கொடி

முதலாம் விமலதர்ம சூரியனுக்குப்பின் அவனது சகோதரனான செனரத் அரசனானான். இவனது காலத்தில் போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்திற்குச் சொந்தமான திருகோணமலை, மட்டக்களப்பு முதலான துறைமுகங்களைத் தம் வசம் வைத்திருந்ததோடு, மன்னார்க் கடலில் கப்பல்களை நிறுத்திக் கண்டி இராச்சியத்தினர் வெளிநாடுகளுடன் செய்யும் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தினர்.

இவனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த இரண்டாம் இராஜசிங்கனின் நோக்கம் போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து அகற்றுவதாகும். 'திரீ சிங்களாதீஸ்வரன்', 'சக்கரவர்த்தி' போன்ற அடைமொழிகளைப் பாவிப்பதன் மூலம் தான் இலங்கையின் ஏக மன்னன் என்பதைக் காட்ட இவன் முயன்றான்.



ஒல்லாந்துப் பாய்க்கப்பல்

போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து விரட்டுவதற்கு சிறந்த கடற்படை அவசியம் என்பதை உணர்ந்த மன்னனான 2ஆம் இராஜசிங்கன் அதன் பொருட்டு ஒல்லாந்தரின் உதவியை நாடிக் கடிதத் தொடர்பு கொண்டான். தமக்கு அளிக்கப்படும் உதவிக்கு ஈடாகக் கறுவா வியாபார உரிமையையும், கிழக்கிலுள்ள ஒரு துறைமுகத்தையும் ஒல்லாந்தருக்குக் கொடுப்பதுமே மன்னனின் எண்ணமாக இருந்ததேயன்றி, ஓர் அந்நிய இனத்தவரை இந்நாட்டிலிருந்து அகற்றிவிட்டு வேறோர் அந்நிய இனத்தவரை இந்நாட்டிற்கு வரவழைப்பது அல்ல.



ஒல்லாந்தர் கண்டி அரசனைச் சந்தித்தல்.

கி.பி 1638இல் வெஸ்ட வோல்ட் என்பவனின் தலைமைத்துவத்திலான ஒல்லாந்தக் குழுவினர் மட்டக்களப்புக்கு வந்ததுடன் மன்னன் இரண்டாம் இராஜசிங்கனைச் சந்தித்து உடன்படிக்கையில் கைச்சாத்திட்டான். (1638 மே மாதம் 23ஆம் திகதி)

**1638ஆம் ஆண்டு உடன்படிக்கையின் நிபந்தனைகள்**


1. ஒல்லாந்தர், போர்த்துக்கேயரது கோட்டையைத் தாக்கி அவர்களைக் கரையோரப் பிரதேசத்திலிருந்து துரத்துதல் வேண்டும்.
2. போர்ச்செலவாக மன்னன் கறுவா, மிளகு, தேன் என்பவற்றைக் கொடுப்பதுடன் யானைகள் தவிர்ந்த ஏனைய வர்த்தகத்தில் ஒல்லாந்தருக்கு ஏகபோக உரிமை அளித்தல் வேண்டும்.
3. கைப்பற்றப்பட்ட கோட்டைகளில் கண்டி அரசனின் விருப்பப்படி ஒல்லாந்தப் படையினர் தங்கியிருத்தல் வேண்டும்.
4. அரசன் அவர்களுக்கு சம்பளம் வழங்கி உணவளித்தல் வேண்டும்.

இதில் மூன்றாவது விடயத்தில் ‘அரசனின் விருப்பப்படி’ என்பது ஒல்லாந்தரின் பிரதியில் காணப்படவில்லை. இதனால் பின்னர் அரசனுக்கும், ஒல்லாந்தருக்கும் இடையில் பகை ஏற்பட இது வழிவகுத்தது. இந்த உடன்படிக்கை ஒல்லாந்தருக்கு சார்பான உடன்படிக்கையாக அமைந்தமை தெளிவாகிறது. உடன்படிக்கையின் படி போர்த்துக்கேயர் பின்வருமாறு வெளியேற்றப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| 1638 | - | மட்டக்களப்புக் கோட்டை கைப்பற்றப்படல் |
| 1639 | - | திருகோணமலைக் கோட்டை கைப்பற்றப்படல் |
| 1640 | - | நீர்கொழும்புக் கோட்டை கைப்பற்றப்படல் |
| 1640 | - | காலிக் கோட்டை கைப்பற்றப்படல் |
| 1655 | - | களுத்துறைக் கோட்டை கைப்பற்றப்படல் |
| 1655 | - | அங்குருவாதொட்ட கோட்டை கைப்பற்றப்படல் |
| 1658 | - | கொழும்புக் கோட்டை கைப்பற்றப்படல் |
| 1658 | - | யாழ்ப்பாணக் கோட்டை கைப்பற்றப்படல் |

ஆரம்பத்தில் ஒல்லாந்தர் கோட்டையைக் கைப்பற்றியபோது தாம் அரசனுக்காகவே அங்கு தங்கியிருப்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவர்களது கடிதங்களில் காணப்பட்ட சில வரிகள் இவற்றைத் தெளிவுபடுத்துகிறது. எனினும், பின்னர் அரசனைப் பொருட்படுத்தாது செயற்பட்டமை தெளிவாகிறது. 2ஆம் இராஜசிங்க மன்னன் கோட்டைகளை ஒல்லாந்தரிடம் தரும்படி கேட்ட போது அவைகளைக் (கோட்டைகளைக்) கைப்பற்றச் செலவாகிய செலவினைத் தரும் வரை தாம் அங்கு தங்கியிருப்பதாகக் கூறினர்.

எவ்வாறெனினும் கி.பி 1658 ஆம் ஆண்டளவில் போர்த்துக்கேயரின் கீழிருந்த பெரும்பகுதிகளைத் தனக்குக் கீழ் வைத்திருக்க இரண்டாம் இராஜசிங்கனால் முடிந்தது. அப்பகுதிகளாவன:


ஒல்லாந்தரின் பீரங்கி

1. ஏழு கோறளை
2. சப்ரகமுவாவின் ஒரு பகுதி
3. மட்டக்களப்பு
4. திருகோணமலை
5. நீர்கொழும்பிலிருந்து புத்தளம் வரையிலான பிரதேசம்.

கண்டி இராச்சிய மன்னன் கற்பிட்டி, நீர்கொழும்பு வழியாக இந்தியாவுடன் நடாத்தும் வர்த்தகத்தையும் ஒல்லாந்தர் விரும்பவில்லை. அவ்வாறே ஒல்லாந்தரின் துன்புறுத்தலால் கண்டி இராச்சியத்திற்குச் சென்ற கத்தோலிக்கருக்குக் கண்டி, கலேவெல, வஹாகோட்டை முதலான இடங்களில் பாதுகாப்பு அளிக்கப்பட்டதை ஒல்லாந்தர் விரும்பவில்லை. இதனால் கி.பி 1659 தொடக்கம் கி.பி 1668 வரையிலான காலப்பகுதியில் ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்தின் பெரும் பகுதியைப் பிடித்தனர். கற்பிட்டி துறைமுகத்தையும் கைப்பற்றினர். போர்த்துக்கேயருக்குப் பதிலாக வேறொரு இனத்தவரை வரவழைத்தமையால் **''இஞ்சியை கொடுத்து மிளகாய் வாங்கியது போல''** என்ற வாக்கியம் மக்களிடையே பரவியது. அதிக நாட்கள் செல்லுமுன் ஒல்லாந்த ஆளுநருக்குத் தான் பலவீனன் அல்ல என்பதை அரசன் நிரூபிக்கலானான். கி.பி 1670 - 1680 கிடையிலான காலப்பகுதியில் அரசனால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அரசனிடமிருந்து கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை மீண்டும் ஒல்லாந்தரிடமிருந்து மீட்டுக்கொள்ள முடிந்தது.


கொழும்புக் கோட்டையைக் கைப்பற்றிய ஹல்பட்

**செயற்பாடு**


1. ஒல்லாந்தரால் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கோட்டைகள் அமைந்துள்ள இடங்களை இலங்கைப் படமொன்றில் குறிக்கவும்.
2. போர்த்துக்கேயரை வெளியேற்ற ஒல்லாந்தரை வரவழைத்தமை சரியானதா? தவறானதா? என்ற தலைப்பில் வகுப்பில் விவாதம் ஒன்று நடாத்துக.



இரண்டாம் இராஜசிங்கன்

இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே மோதல்களில் கைப்பற்றப்பட்ட பிரதேசங்கள்:

1. கற்பிட்டித் துறைமுகம்
2. திருகோணமலை, மட்டக்களப்பு, கொட்டியாரம் முதலான துறைமுகங்கள்
3. மட்டக்களப்பிலிருந்து வளவ கங்கை வரையான தென்கிழக்குக் கரையோரப் பிரதேசங்கள்
4. களனி கங்கை, களுகங்கை என்பவற்றிற்கு இடையிலான பிரதேசங்கள்



ஒல்லாந்தர் கால கொழும்புக் கோட்டை

அதிக இலாபத்தைப் பெறுவதே வர்த்தக சங்கத்தின் நோக்கமாக இருந்தது. கண்டி அரசனுடன் நட்புறவுடன் இருக்கும்படியே ஆளுநர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. எனினும், விசேடமாக பன்ஹுன்சினதும் அவனது மகனதும் ஊழல்களை மறைப்பதற்காகக் கண்டி மன்னனுடன் முரண்பட்டுக் கொண்டனரென்று கூறப்படுகிறது. கி.பி 1670 ஆம் ஆண்டு அரசன் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களைக் கடுமையாகத் தாக்கியதால் ஒல்லாந்தர் அரசனுடன் நட்புறவை மேற்கொள்ளும் பொருட்டு ஆளுநர் லோரன்ஸ் பீலை நியமித்தனர். அவன் அரசனுக்குப் பெறுமதிவாய்ந்த பொருட்களை அன்பளிப்புச் செய்து அரசனுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டான்.

எமது நாடு வேறு இனத்தவருக்கு அடிமைப்படாத சுதந்திர நாடாக இருக்க வேண்டும் என்பதே இரண்டாம் இராஜசிங்க மன்னனின் எண்ணமாக இருந்தது. அதன் பொருட்டுப் போர்த்துக்கேயரை வெளியேற்றியவுடன் ஒல்லாந்தர் கரையோரப் பிரதேசத்தைக் கைவிடாத போது அவர்களுடன் சமர் செய்தான். எனினும் மன்னனுக்கு எதிராக அம்பன்வெல ராலவின் தலைமைத்துவத்தின் கீழ் சதி செய்யப்படுவதை அறிந்து மன்னன் கவலையடைந்தான்.

மன்னனைக் கொலை செய்வதே அம்பன்வெல ராலவின் சதியாக இருந்தது. அதனை அறிந்து கொண்ட அலுவிகாரை மஹமுதலி அதனை அரசனுக்குத் தெரிவித்து அரசனை அங்கிருந்து அகற்றி, அந்த இடத்தில் தான் இருந்தான். எனவே அரசனென எண்ணி அலுவிகாரை கொலை செய்யப்பட்டான். மன்னன் அவனது உறவினர்களுக்கு சன்மானம் வழங்கி கௌரவித்தான்.

கி.பி 1687 ஆம் ஆண்டு இரண்டாம் இராஜசிங்கன் இறந்த பின்னர் அவனது மகன் இரண்டாம் விமலதர்மசூரியன் ஆட்சி பீடமேறினான். அவன் பௌத்த பிக்குகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தான். அத்தோடு சமாதானத்தை விரும்பியவனாவான். தன் தந்தையினால் உரிமையாகக் கிடைத்த அரசைப் பாதுகாத்ததோடு ஒல்லாந்தருடன் நல்லுறவைப் பேணினான். இதுவரை யுத்தத்தின்பொருட்டுப் பெருந்தொகையான பணம் செலவு செய்ய வேண்டி இருந்ததால் கண்டி இராச்சியத்துடன் சமாதானமாகச் செயற்படவே ஒல்லாந்தர் விரும்பினர். இதன் பொருட்டு இரு சாராரும் செயற்பட்ட விதம் பின்வருமாறு:

- இரண்டாம் விமலதர்மசூரிய மன்னன் பதவியேற்றமைக்காக ஒல்லாந்தரால் கொழும்பில் விழாக் கொண்டாடப்படல்.
- அரசனுக்கு இருந்த அதிகாரத்தின் பிரகாரம் வெலிகம பிரதேசத்தை பஸ்நாயக்க நிலமே ஒருவரிடம் ஒப்படைப்பதை ஒல்லாந்தர் அங்கீகரித்தமை.
- பிட்டிகல கோறளையில் கறுவாவைப் பெற்றுக் கொள்வதற்கு ஒல்லாந்தருக்கு இருந்த தடையை நீக்குதல்.
- அரசனின் கறுவா, பாக்கு, யானை என்பவற்றை வர்த்தக சங்கத்தினர் பணம் கொடுத்துப் பெறுவதற்கு உடன்படல்.
- உபசம்பதா எனும் சடங்கினை நடாத்துவதற்கு பர்மாவிலிருந்து பிக்குகளை அழைத்துவர தமது கப்பல்களைக் கொடுத்தமை.
- கி.பி 1769 இல் லோரன்ஸ் பீல் மட்டக்களப்பு, கற்பிட்டி, கொட்டியாரம், திருகோணமலை போன்ற துறைமுகங்களை மன்னனுக்கு யாத்திரைக்காக திறந்து கொடுத்தமை.
- 'அரசனின் கீழுள்ள பணியாளன்', 'மகாராசனின் கோட்டை' 'திரீ சிங்களாதீஸ்வர' போன்ற சொற்களைக் கடிதங்களில் பாவித்தமை.
- கி.பி 1697 இல் மன்னனின் திருமணத்தின் பொருட்டு மணப்பெண்ணை அழைத்து வர ஒல்லாந்தர் கப்பல் கொடுத்தமை.




சிங்கள அதிகாரிகள் ஒல்லாந்த ஆள்பதியைச் சந்தித்தல்

இவ்வாறு ஒல்லாந்தர் நட்புறவைப் பேணும் வேளையில் தமக்கு சாதகமான உடன்படிக்கை ஒன்றினை கி.பி.1688ஆம் ஆண்டு அரசனிடம் சமர்ப்பித்தனர். அதில் பின்வருவன அடங்கின :

- கி.பி 1638ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி கொடுக்கப்பட வேண்டிய கடனை ஒல்லாந்தருக்குச் செலுத்த வேண்டும்.
- இரு சாராரிடையேயும் நடைபெறும் வர்த்தகத்திற்கு வரி அறவிடாதிருத்தல் வேண்டும்.
- கறுவா, மிளகு, யானைத்தந்தம், தேன் போன்றவைகளை அரசன் வர்த்தக சங்கத்திற்கு மாத்திரமே கொடுத்தல் வேண்டும்.
- அரசன் இங்கிலாந்து, பிரான்ஸ், டென்மார்க், ஜேர்மன் போன்ற ஐரோப்பிய நாடுகளுடன் உறவைப் பேணக்கூடாது.
- உரோமன் கத்தோலிக்கக் குருமார்களைக் கண்டி இராச்சியத்திலிருந்து துரத்த வேண்டும்.

தனது அரசின் சுதந்திரத்தை மேலாக மதித்த மன்னன் இந்த உடன்படிக்கையை நிராகரித்தான். இதன் மூலம் மன்னன் உறுதியான உள்ளம் உடையவன் என்பது தெளிவாகியது.




*ஒல்லாந்தருக்கும் 2 ஆம் இராஜசிங்கனுக்குமிடையே சண்டை ஏற்பட்ட பிரதேசங்கள்*

இரண்டாம் விமலதர்மசூரியனின் பின்னர் அவனது மகன் ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் மன்னனானான். இவனிடம் வீரமும் சமயப் பற்றும் இருக்கவில்லை. தன் தந்தையைப் போலவே தென் இந்தியாவிலிருந்து இளவரசியை வரவழைத்துத் திருமணம் செய்து கொண்டான். இவர்களுக்குப் பிள்ளைகள் இருக்கவில்லை. அரச செயற்பாடுகளில் தன் மனைவியின் சகோதர்களிடம் நெருங்கிய தொடர்பு வைத்து அவர்களுடன் இணைந்து செயற்பட்டான்.

இந்த மன்னனின் நாயக்க வம்ச உறவினர்கள் தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான வர்த்தகத்தை மேற்கொண்டனர். மிளகு, கறுவா, பாக்கு, யானைத் தந்தம் போன்றன இந்தியாவிற்குக் கொண்டு செல்லப்பட்டன. இதனால் ஒல்லாந்த வர்த்தக சங்கத்திற்குப் பெரும் நட்டம் ஏற்பட்டது. எனவே ஒல்லாந்தர் அரசனுக்குச் சொந்தமான கற்பிட்டி போன்ற துறைமுகங்களை மூடிவிட்டனர். 1712ஆம் ஆண்டு துறைமுகங்களைத் திறக்குமாறு கோரிய பொழுதிலும் ஒல்லாந்தர் அவற்றைத் திறக்கவில்லை. இதற்கிடையில் கண்டி அரச சபைக்குச் சென்ற வில்லியம் ஹென்றிக் த பிவர் என்பவனின் தகாத நடத்தையால் கரையோரப் பிரதேசங்களிலிருந்து கண்டி இராச்சியத்துக்குள் நுழையும் கடவைகள் அனைத்தையும் மூடிவிடுமாறு அரசன் பணித்தான். அவ்வாறு செய்வதன் மூலம் ஒல்லாந்தர் துறைமுகங்களைத் திறந்து விடுவர் என அரசன் எண்ணிய போதிலும் அவ்வாறு நடக்கவில்லை. இதனால் ஒல்லாந்தர் ஆட்சி நிலவிய பிரதேசத்தில் துன்பத்துக்குள்ளாகிய கறுவாப்பட்டை உரிக்கும் தொழிலாளரைக் கண்டி இராச்சியத்திற்கு மன்னன் அழைத்துக் கொண்டதோடு அப்பகுதியில் கலகம் ஏற்படுவதற்கும் வழி செய்தான்.

கடவை என்பது மலை நாட்டிற்குள் வருவதற்கு இருந்த வழியாகும். இந்த இடங்களில் சோதனை நடைபெறுவதோடு வரியும் அறவிடப்படும்.

## ஒல்லாந்தருக்கு எதிரான செயல்கள்

- கி.பி 1713 - 1714 ஆண்டுகளில் சியனே கோறளை, மாத்தறை திசாவை ஆகிய இடங்களிலுள்ள மக்கள் கலகம் செய்தல்.
- கறுவாப்பட்டை உரிப்போர் வேலைநிறுத்தம் செய்தலும் கண்டி இராச்சியத் திற்குத் தப்பிச் செல்லுதலும்.
- காலி, மாத்தறை, கற்பிட்டி, ஹெவாகம், றைகம போன்ற இடங்களுக்கும் இது பரவுதல்.
- இதற்குப் பின்னணியில் கண்டிப் பிரதானிகள் இருப்பதாக ஒல்லாந்தர் கருதுதல்.
- ஒல்லாந்தருக்கு எதிராக மக்கள் எழுச்சியடைந்த போதும் மலைநாட்டு மன்னன் அதனால் பயனடையவில்லை

இச்சிக்கலைத் தீர்த்து வைக்கும் பொருட்டு ஆள்பதி வில்லெம் பெர்க் இம்ஹோப் சில நடவடிக்கைகளை எடுத்தார். அவையாவன :

1. கண்டி இராச்சியத்திற்குத் தூதுக்குழு அனுப்பப்பட்டது. நரேந்திர சிங்க மன்னன் கலகத்திற்கும் தனக்கும் சம்பந்தமில்லையெனக் கூறினான்.
2. கறுவாப்பட்டை உரிப்போருக்கு விதிக்கப்பட்டிருந்த சட்டங்கள் தளர்த்தப்பட்டு அவர்கள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர்.
3. அரசனது துறைமுகங்களைத் திரும்பக் கொடுப்பதற்கு ஆளுநர் பத்தேவியாவிற்கு சிபாரிசு செய்த போதிலும் அது நிராகரிக்கப்பட்டது.



கறுவா உரிக்கும் தொழிலாளர்கள்

கி.பி 1739ஆம் ஆண்டு பராக்கிரம நரேந்திர சிங்கன் இறந்தான். அவனுக்கு வாரிசு இல்லாததால் அவனது மனைவியின் சகோதரனான நாயக்க வம்சத்தைச் சேர்ந்த ஸ்ரீ விஜய இராஜசிங்கன் அரசனானான். வெலிவிட்ட சரணங்கர என்ற பௌத்த பிக்குவின் ஆலோசனைப்படி நலிவுற்று இருந்த உபசம்பதா சடங்கை நடத்த அரசன் பர்மாவிலிருந்து பிக்குகளை வரவழைப்பதற்கு ஒல்லாந்தரின் உதவியுடன் செயற்பட்டான். கி.பி.1741ஆம் ஆண்டு பர்மாவுக்குச் சென்ற தூதுக் குழுவினர் பிரயாணம் செய்த ஒல்லாந்தக் கப்பல் சேதமடைந்ததால் கி.பி.1747ஆம் ஆண்டு மீண்டும் ஒரு தூதுக்குழு அனுப்பப்பட்டது. அதற்கும் ஒல்லாந்தரது உதவி பெறப்பட்டது. ஒல்லாந்தரது தலையீட்டால் கண்டி இராச்சியத்திலிருந்து கத்தோலிக்கர்கள் வெளியேற்றப்பட்டனர்.

மன்னன் ஸ்ரீ விஜய ராஜசிங்கனின் உறவினர்கள் தென் இந்தியாவுடன் வர்த்தகத் தொடர்பினை வைத்திருந்தது ஒல்லாந்த வர்த்தக சங்கத்திற்குப் பாதகமாக இருந்ததால் கண்டி அரசனின் ஆட்சிப்பகுதியில் உள்ள துறைமுகங்களைத் தொடர்ந்தும் தமக்குக் கீழ் வைத்திருக்க ஒல்லாந்தர் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். துறைமுகங்களை மன்னன் கேட்ட போது அந்த வேண்டுகோள் ஒல்லாந்தரால் நிராகரிக்கப்படவே கண்டி இராச்சியத்திலிருந்து


இலவச விநியோகத்திற்காக

ஒல்லாந்தர் வர்த்தகப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியாதவாறு மன்னன் கடவைகளை அடைத்து விட்டான். மனக்கசப்பு இருந்தாலும் ஆங்கிலேயரும் பிரான்சியரும் இக்காலப்பகுதியில் இந்து சமுத்திரத்திற்கு வருகை தந்ததால் விஜயராஜசிங்க மன்னனுக்கு எதிராக ஒல்லாந்தரால் செயற்பட முடியவில்லை.

ஸ்ரீ விஜய ராஜசிங்கனும் வாரிசு இல்லாமல் கி.பி 1747 இல் இறக்கவே அவனது மனைவியின் சகோதரன் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் அரசனானான். இக்கால கட்டத்தில் கரையோரப் பிரதேசத்தில் கறுவாப்பட்டை உரிப்போர் பலதுன்பங் களுக்கு உள்ளானதால் அவர்கள் கலவரம் செய்தனர். இதனால் ஒல்லாந்தர் இக்கட்டான நிலையை எதிர்நோக்க வேண்டி இருந்தது. அவர்களது வருமானம் குறைந்ததால் நிலவரியை உயர்த்தினர். அதற்கும் எதிர்ப்பு ஏற்பட்டது. அரசனின் அனுசரணையுடன் ஒல்லாந்தரது நிர்வாகப் பகுதியில் கலவரத்தை ஏற்படுத்தியோருக்கு கண்டி இராச்சியத்திலிருந்து ஊக்கமும் உதவியும் கிடைத்தது. இவ்வேளையில் அரசன் படையை வழிநடாத்திச் சென்று ஹங்வெல்ல கோட்டையை கைப்பற்றினான். மாத்தறை, காலி ஆகிய கோட்டைகளையும் நாசமாக்கினான்.

கி.பி 1762ஆம் ஆண்டளவில் கண்டி இராச்சியத்திற்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான மனக்கசப்பு அதிகரித்தது. ஒல்லாந்தருக்கு எதிராக வேறு இனத்தவரின் உதவியைப் பெறவும் யோசனை இருந்தது. கி.பி 1762ஆம் ஆண்டு ஜோன் பைபஸ் என்ற ஆங்கிலேயன் கண்டி இராச்சியத்திற்கு தூது வந்தான். இதனால் பயமடைந்த ஒல்லாந்தர் கி.பி 1762 -1765ற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் புத்தளம், கற்பிட்டி ஆகிய துறைமுகங்களைக் கைப்பற்றி, மாத்தறையில் நட்சத்திரக் கோட்டையை அமைத்துக் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்தனர். அப்போது ஒல்லாந்தருக்கு உதவும் அனைவரும் சரீர வரியிலிருந்து (கட்டாய சேவை இராஜகாரியம்) விடுவிக்கப்படுவர் எனக் கூறப்பட்டது.

> கட்டாய சேவை இராஜகாரியம் (சரீரவரி) என்பது கட்டாயமாக நாட்டு மக்கள் அரசாங்கத்திற்கு வழங்கிய உழைப்பாகும். இது அரசனின் பிரதான வருமானங்களில் ஒன்றாக இருந்ததுடன் போர்த்துக்கேயரைப் போலவே ஒல்லாந்தரும் இதனைப் பயன்படுத்தினர்.

மலைகளுக்கூடாக ஒல்லாந்தப் படை கண்டியை அடையும் போது சிங்களப் படை அவர்களைத் தாக்கி விரட்டினர். எனினும், ஆளுநர் பன் எக், நாயக்க மன்னனுக்கு எதிராக இருந்த பிரதானிகளின் உதவியுடன் ஏழு கோறளை வழியாக ஒரு படையை அனுப்பினான். இந்த ஆக்கிரமிப்பில் மன்னனுக்குப் பிரதானிகளின் ஒத்துழைப்புக் கிடைக்காமையால் அவன் பின்வாங்கியதுடன் ஒல்லாந்தர் கேட்கும் எதையும் தருவதாக வாக்களித்தான்

ஆளுநரின் காலடியில் அரசன் தன் கிரீடத்தை வைக்க வேண்டுமென்றும் பின்னர் வர்த்தக சங்கத்திற்குக் கப்பம் கட்ட வேண்டுமென்றும் ஒல்லாந்தர் கூறினர். இதனால் கோபமடைந்த மன்னன் யுத்தத்தை விரும்பினான். மலைநாட்டிற்கு வந்த ஒல்லாந்தப் படை சிங்களப் படையிடம் படுதோல்வி அடைந்தது. பன் எக் ஆளுனர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு விலியம் பெல்க் என்பவர் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.


இக்காலகட்டத்தில் நாயக்கர்களது செயல்களால் பௌத்த குருமாரும், பிரதானிகளும், பொதுமக்களும் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனில் அதிருப்தி அடைந்திருந்தனர். இதனை அறிந்த அரசன் சமாதானத்தின் பொருட்டு ஒல்லாந்தருக்குத் தூது அனுப்பினான். இதனைப் பயன்படுத்திய ஆளுனர் பல நிபந்தனைகளை விதித்தான். மன்னன் உடனே அதற்கு உடன்பட்டதோடு 1766ல் 25 பிரிவுகளைக் கொண்ட உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

**கி.பி 1766 உடன்படிக்கையின் அம்சங்கள் சில பின்வருமாறு**

1. ஒரு பகுதிக்கு கிழக்கிந்திய வர்த்தக சங்கமும், மற்றைய பகுதிக்கு அரசனும் அமைச்சரவையும் கைச்சாத்திட்டு சமாதானமாக செயற்படல்.
2. யாப்பாபட்டுன (யாழ்ப்பாணம்), மன்னார், கொழும்புத் திசாவை, காலி கோறளை, புளியந்தீவு, திருகோணமலையைச் சூழவுள்ள பிரதேசம் என்பன ஒல்லாந்தருக்கு உரிய பிரதேசமாக ஏற்றுக் கொள்ளப்படல்.
3. கடற்கரையிலிருந்து 4 மைல் அகலப் பிரதேசம் ஒல்லாந்தருக்குச் சொந்தமாதல்.

## இந்த உடன்படிக்கையின் விளைவுகள்

1. இந்த உடன்படிக்கை ஒல்லாந்தரின் அதிகாரம் வளர்ச்சியடைவதற்கு நல்ல சந்தர்ப்பமாக அமைந்தது.
2. கண்டி தனது இராச்சியத்திற்கு உரிய அனைத்துத் துறைமுகங்களையும் இழந்ததால் வெளிநாட்டு வர்த்தகம் தடைப்பட்டது.
3. உப்பைப் பெறுவதற்கு வெளிநாட்டினரின் உதவி தேவைப்பட்டது.
4. ஒல்லாந்தரை விரட்ட வேண்டுமென்பது அரசனுக்கும், பிரதானிகளுக்கும் தெளிவானது.
5. பிரதானிகளுக்கும் வர்த்தகத்தின் மூலம் கிடைத்த இலாபம் இல்லாமல் போனது.




ஒல்லாந்தர் கால காலிக் கோட்டையின் இலச்சினை

இலங்கை வரலாற்றில் மிகவும் கேவலமான கி.பி 1766ம் ஆண்டு உடன்படிக்கையை இரத்துச் செய்யுமாறு அமைச்சர்கள் கேட்டுக் கொண்ட போதும் அது ஒல்லாந்தரால் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. ஆதலால் ஒல்லாந்தரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு வேறொரு வெளிநாட்டவரின் உதவி அவசியம் என்பது தெளிவானது.

கி.பி 1766ம் ஆண்டு மனக்கசப்பு ஏற்படுமுன் கண்டி இராச்சியத்திற்கும் ஒல்லாந்தருக்குமிடையே தொடர்பு இருந்தது. அதற்கு எடுத்துக் காட்டாக பின்வரும் சம்பவத்தைக் குறிப்பிடலாம். கி.பி 1753ம் ஆண்டு கீர்த்தி ஸ்ரீராஜசிங்க மன்னன் வெலிவிட்ட சரணங்கர தேரோ என்ற பௌத்த பிக்குவின் ஆலோசனைப்படி சீய தேசத்திலிருந்து உபசம்பதா சடங்கை நடாத்துவதற்கு உபாலி என்ற பிக்குவின் தலைமையில் 18 பிக்குமார்களை வரவழைத்தான். ஒல்லாந்தக் கப்பலிலேயே இவர்கள் அழைத்து வரப்பட்டனர்.

# ஒல்லாந்தர் காலத்தில் கொழும்பு கோட்டைப் படம்




1766ஆம் ஆண்டுக்கு முன்

1766ஆம் ஆண்டு உடன்படிக்கையின் பின்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட பிரதேசம்.




இலவச விநியோகத்திற்காக

**செயற்பாடு**

1. ஒல்லாந்தருடன் தொடர்பு வைத்திருந்த கண்டி மன்னர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்குக.
2. கண்டி இராச்சியத்துடன் தொடர்பு கொண்ட ஒல்லாந்த ஆளுனர்களின் பெயர்களைத் தருக.
3. அரசனுக்கும், பிரதானிகளுக்கும் இடையிலான பகைமை கி.பி 1766ஆம் ஆண்டு உடன்படிக்கைக்குக் காரணமாக அமைந்ததை விளக்குக.

### ஒல்லாந்தரின் கீழ் இலங்கையில் நிர்வாக, பொருளாதார, சமூக கலாசார கட்டமைப்பு



ஒல்லாந்தர் நிருவாகத்தில் முக்கிய மூன்று பிரிவுகளில் கவனம் செலுத்தினர். அவையாவன:

1. பிரதேச நிருவாகம்
2. நீதிமன்றச் செயற்பாடுகள்
3. கல்விச் செயற்பாடுகள்

ஒல்லாந்தரது நிருவாகம் குறைந்த செலவில் கூடிய வருமானத்தைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டே செயற்பட்டது. அதன்படி அவர்கள் சுதேச நிருவாக அமைப்புக்களையும் தமது நிருவாகத்தில் பயன்படுத்திக் கொண்டனர். எனினும் தமக்குத் தேவையான மாற்றங்களையும் செய்தனர். எடுத்துக் காட்டாக திசாவைப் பதவிக்கு ஒல்லாந்தர் ஒருவர் நியமிக்கப்படல்.ஒல்லாந்த ஆட்சிச் சபையான ஸ்டேட் ஜெனரலின் அனுமதியின் கீழ் வர்த்தக சங்கம் அமைக்கப்பட்டதுடன் ஒல்லாந்தின் ஹேக் நகரில் அதன் அதிகாரப் பிரிவு இருந்தது. பத்தேவியாவில் ஆளுநரும் அவரது சபையும் இருந்தது. இலங்கையின் நிர்வாகம் தொடர்பாக காலியில் ஆளுநரும் அவரது சபையினரும் இருந்தனர். காலியில் அமைந்திருந்த இச்சபையின் அங்கத்தினர் பின்வருமாறு:


ஒல்லாந்த படைவீரர்

1. ஆளுநர்
2. செயலாளர்
3. ஓபர் ஹுப்ட்மன் (சிரேஷ்ட வர்த்தகர்)

## பிரதேச நிருவாகம்

### கொமாண்டரி அமைக்கப்படல் (1658 இன் பின்னர்)

நிர்வாகத்தை இலகுவாக்கும் பொருட்டு ஒல்லாந்தர் தமது நிருவாகப் பிரதேசத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்தனர்:

1. கொழும்பு கொமாண்டரி - தலைவர் - ஆளுநர்
2. காலி கொமாண்டரி - காலி கொமாண்டர்
3. யாழ்ப்பாண கொமாண்டரி - யாழ்ப்பாண கொமாண்டர்

சிவில் நிர்வாகம், வர்த்தகம், இராணுவம் ஆகிய மூன்றிலும் குறிப்பிட்ட கொமாண்டரியின் கொமாண்டர் (பிரிவு) கீழ் நிர்வாகச் செயற்பாடுகள் நடைபெற்றன. யாழ்ப்பாணம், காலி ஆகிய கொமண்டர்கள் ஆளுநருக்குக் கட்டுப்பட்டோராக இருந்த போதிலும் பெரும்பாலும் சுயாதீனமாகச் செயற்பட்டனர். பின்னர் வழங்கப்பட்ட திசாவைப் பதவி ஆரம்பத்தில் சுதேசிகளுக்கு வழங்கப்பட்ட போதிலும் பிற்காலத்தில் அப்பதவிக்கு ஒல்லாந்தர் நியமிக்கப்பட்டனர்.



ஒல்லாந்த கப்பித்தான்

## நீதிமன்ற நிருவாகம்

ஒல்லாந்தர் நம் நாட்டில் நிலவிய சட்டத்தையும் நிதி நிறுவனங்களையும் ஓரளவுக்குப் பயன்படுத்திய போதிலும் புதிய நீதிமன்ற முறை ஒன்றையும் அறிமுகப்படுத்தினர். அந்நீதிமன்ற முறை பின்வருமாறு அமைந்தது.

- ராத்வான் ஜஸ்டிஸ் - உயர் நீதிமன்றம்
- லான்ட் ராத் - நிலம் தொடர்பான நீதி மன்றம்
- சிவில் ராத் - சிவில் நீதிமன்றம்

## ராத்வான் ஜஸ்டிஸ் (Raad Van Justities)

கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ராத் வான் ஜஸ்டிஸ் என்ற பெரிய நீதி மன்றங்கள் நிறுவப்பட்டன. இங்கு பாரதூரமான குற்றச் செயல்கள் சம்பந்தமான வழக்குகள் விசாரணை செய்யப்பட்டன. இவை தவிர சிவில் ராத், லேண்ட்ராத் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கு எதிராக வரும் முறையீடுகளும் விசாரிக்கப்பட்டன. யாழ்ப்பாணம், காலி ஆகிய நீதிமன்றங்களின் தீர்ப்புக்கு எதிராக முறையீடுகள் கொழும்பு ராத்வான் ஜஸ்டிஸ்கும் கொழும்பில் வழங்கப்படும் தீர்ப்புக்கு எதிராக முறையீடுகளை பத்தேவியாவிலும் சமர்ப்பிக்கக்கூடியதாக இருந்தது.

## சிவில் ராத், லாண்ட் ராத் (Civil Raad, Land Raad)


கொழும்பு, காலி, மாத்தறை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், புத்தளம் போன்ற பிரதான நகரங்களில் இவை நிறுவப்பட்டிருந்ததுடன், சிவில் றாத் நீதிமன்றங்களில் சிறு குற்றங்கள் சம்பந்தமான வழக்குகள் விசாரிக்கப்பட்டன. இவைகளில் சிங்கள சட்டங்கள் தெரிந்த நீதிமன்ற உதவியாளர்களின் உதவி பெறப்பட்டது.

சிங்கள நிருவாக அமைப்பின்படி கிராமத் தலைவர், விதானை, முதலி, கோரளை, திசாவை போன்ற அலுவலர்களுக்கு அவர்களது பதவிக்கு ஏற்ப நீதிமன்ற அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. ஒல்லாந்தரது நிருவாகத்தில் சிறு குற்றங்களை விசாரிக்க இவர்களது உதவி பெறப்பட்டதுடன், இவர்களின் தீர்ப்புக்கு எதிராக சிவில் றாத், லேண்ட் றாத் நீதிமன்றங்களுக்கும் செல்லக்கூடியதாக இருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்த “ தேசவழமைச் சட்டமும் கோனேலியஸ் ஜான் சைமன் என்பவரால் தொகுக்கப்பட்டது” நடைமுறையில் இருந்தது. கரையோரப்பகுதிகளில் இருந்தோருக்கு உரோமன் டச்சுச் சட்டமும், முஸ்லீம்களுக்கு இஸ்லாமியச் சட்டமும் நடைமுறையில் இருந்தது. மட்டக்களப்பு, புத்தளம் பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் பேசும் மக்களிடையே புழக்கத்திலிருந்த முக்குவர் சட்டங்களைக் கூட நடைமுறைப்படுத்தினர்.

## ஒல்லாந்தரது பொருளாதார முறைமை

இலங்கையில் கறுவாவிலேயே ஒல்லாந்தர் மிகவும் அவதானமாக இருந்தனர். அதன் பொருட்டு சாதி முறையிலான இராசகாரிய முறையைப் பயன்படுத்தினர். அதில் மகாபத்தே திணைக்களத்தைக் கப்பித்தான் ஒருவரிடம் ஒப்படைத்ததுடன் இராசகாரியமுறையும் பயன்படுத்தப்பட்டது.

கறுவாவைத் தவிர பாக்கு, முத்து, யானைத்தந்தம், மிளகு, சாதிக்காய், ஏலம், யானை, தேன் போன்றவற்றை ஒல்லாந்தர் முக்கியமானவையாகக் கருதினர். கி.பி1638ம் ஆண்டு உடன்படிக்கையில் இப்பொருட்களை வர்த்தக சங்கத்திற்கு மாத்திரம் கொடுக்கும்படி கூறியதிலிருந்து இது தெளிவாகிறது.


ஒல்லாந்தரது பணம் (கில்டர்)

அதில் ஏகபோக உரிமையை அனுபவிக்க அவர்கள் எப்போதும் முயன்றனர். அதன்பொருட்டு கறுவா, வியாபாரம், போக்குவரத்து என்பவற்றை

தம்மிடம் வைத்துக் கொள்வது, அன்பளிப்பாக வழங்குவது என்பவற்றைத் தடை செய்யும் கட்டளை ஒன்றும் பிறப்பிக்கப்பட்டது.

ஒல்லாந்தரின் வருமான வழிகளுள் நிலங்களிலிருந்து பெறப்பட்ட வரி முக்கிய இடத்தை பெற்றிருந்தது. நிலங்களின் உரிமை, உற்பத்திப் பொருள், அறவிடப்பட வேண்டிய வரி என்பவற்றை எல்லாம் உட்படுத்தித் தயாரிக்கப்பட்ட பதிவேடுகள் தோம்புகள் எனப்பட்டன. ஒல்லாந்தரது நிருவாகப் பகுதியில் உணவுக்காக அதிக பணம் செலவிட வேண்டி இருந்ததால் உள்நாட்டுப் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு அவர்கள் பல வழிகளில் முயன்றனர்.
அவையாவன :

- முத்துராஜவெல சதுப்பு நிலத்தை விளைநிலமாக்க வேண்டிய நடவடிக்கையை மேற்கொண்டனர்.
- கல்கிசைப் பகுதியில் கரும்புப் பயிர்ச்செய்கையை ஆரம்பித்தனர்.
- கோப்பிப் பயிர்ச்செய்கைக்கு ஊக்கமளித்தனர்.
- துணிகளுக்கு சாயமூட்டுவதற்குத் தேவையானோரைத் தென் இந்தியாவிலிருந்து வரவழைத்து, யாழ்ப்பாணத்தில் அக்கைத்தொழிலை அபிவிருத்தி செய்தனர்.
- யோதகண்டிய வாவி, கந்தளாய் வாவி ஆகியவற்றைப் புனர்நிருமாணம் செய்தனர்.
- ஓய்வு பெற்ற அதிகாரிகளுக்கு நிலம் வழங்கி அவர்களைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தினர்.
- ஊருபொக்க அணையைக்கட்டி நில்வளகங்கை நீரை கிருவாபத்துவுக்குத் திசை திருப்பினர்.
- புத்தளம், மன்னார், காலி, அம்பாந்தோட்டை போன்ற நகரங்களைப் பாதைகளால் இணைத்தனர்.
- ஹெமில்டன் போன்ற கால்வாய்களை வெட்டி அவற்றில் பொருட்களைக் கொண்டு செல்ல உபயோகப்படுத்தினர்.



கொழும்பிலுள்ள ஒல்லாந்த ஆளுநரின் இல்லம்

## சமூக, பண்பாட்டுத் தாக்கம்

- வர்த்தகம் வளர்ச்சியுற்றதால், காலி, மாத்தறை, மன்னார், புத்தளம், சிலாபம், மட்டக்களப்பு , கொழும்பு போன்ற நகரங்கள் வளர்ச்சியுற்றன.
- அந்த நகரங்களை இணைத்துப் பாதைகள் அமைக்கப்பட்டன.
- இந்த நாட்டில் பறங்கியர் என்ற இனம் உருவாகியது.
- புரட்டஸ்தாந்து மதம் இந்நாட்டில் வேரூன்றியது.
- கொக்கீஸ், அலுமாரி முதலிய ஒல்லாந்து மொழிச் சொற்கள் தேசிய மொழிகளுடன் கலந்தன.
- ரோமன் டச்சுச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- மேல் நாட்டோடு தொடர்புடைய கல்வி முறையும், நீதிமுறையும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.
- மாடிகளுடனான உயர்ந்த கூரைகளைக் கொண்ட வீடுகள் அமைக்கப்பட்டன.
- ஒல்லாந்த உடைகளுக்கு இந்நாட்டு மக்கள் பழக்கப்பட்டனர்.
- அலுமாரி, பெட்டகம், கதிரை, மேசை போன்ற வீட்டுத் தளபாடங்களுக்கு மக்கள் பழக்கப்பட்டனர்.

**பறங்கியர் எனும் இனத்தவர் ஒல்லாந்தர் சுதேசிகளுடன் கலப்புற்று தோன்றியவர்களாவர்.**



ஒல்லாந்த பீங்கான்



ஒல்லாந்தரின் கண்ணாடிக் குவளை



பர்கோ மாஸ்டர் கதிரை



ஒல்லாந்த உடை


## சமய நடவடிக்கைகள் :-

ஒல்லாந்தரது சமயம் புரட்டஸ்தாந்துவாகும். அது கத்தோலிக்க சமயத்திலிருந்து பிரிந்து வந்ததாகும். கரையோரப் பிரதேசம் ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்ட பின்னர் அங்கிருந்த கத்தோலிக்கர்களுக்கு எதிராக ஒல்லாந்தர் செயற்பட்டனர். ஒல்லாந்தரிடமிருந்து தப்பிக் கொள்வதற்காக அப்பிரதேசத்திலிருந்த கத்தோலிக்கர் கண்டி இராச்சியத்திற்குத் தப்பிச் சென்றனர். ஒல்லாந்தர் தமது சமயத்தைக் கரையோரப் பிரதேசங்களில் பிரசாரம் செய்வதற்குக் கல்வியை ஒரு சாதனமாகப் பயன்படுத்தியதோடு, அரசாங்கத் தொழில் வழங்குதல் போன்ற முறையையும் கையாண்டனர்.

## கல்வி

போர்த்துக்கேயரால் நடாத்தப்பட்ட பங்கு (Parish)ப் பாடசாலைகளை முன்னேற்றித் தொடர்ந்து அவற்றை நடாத்தினர். அங்கு சிங்களத்தில் அல்லது தமிழில் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. 12 வயதிற்குக் உட்பட்ட பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வது கட்டாயமாக்கப்பட்டு ஒரு முறை இது தொடர்பாக சட்டமும் அமுல்செய்யப்பட்டது.

கல்வியின் வழியாக புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்புவதற்கு ஒல்லாந்தர் முயன்றனர். அதன்பொருட்டு ‘‘பிரட்கண்ட்’’ என்றழைக்கப்பட்ட குருமார் மிகவும் அக்கறை காட்டினர். பாடசாலைகளில் மொழி, சங்கீதம், சமயம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டதுடன், முறையான பரீட்சை முறைகளும் ஆரம்பமாகின. பாடசாலை நிருவாகத்தின் பொருட்டு ‘‘ஸ்கொலாக்கல்’’ கமிஸன் நியமிக்கப்பட்டதுடன் பாடசாலை களைப் பரீட்சிப்பதற்காக ஸ்கொலாக்மாரும் நியமிக்கப்பட்டனர். அச்சியந்திரம் ஒன்றை முதலில் ஒல்லாந்தர் கொண்டு வந்ததுடன் கி.பி 1739 அதன் மூலம் வேதாகமத்தின் பகுதிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப் பட்டன.



முதலில் அச்சிடப்பட்ட பிரதியின் ஒருபகுதி

**செயற்பாடு**

- ✸ போர்த்துக்கேய நிருவாகத்தை விட ஒல்லாந்தரின் நிருவாகம் சிறப்பானது. தெளிவுபடுத்துக.
- ✸ ஒல்லாந்தரால் கல்விக்கு வழங்கப்பட்ட சேவைகள் 3 எழுதுக.
- ✸ ஒல்லாந்த ஆட்சியின் விளைவுகள் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

## பயிற்சி

**1. சுருக்கமான விடை எழுதுக.**

1. ஒல்லாந்தர் இலங்கைக்கு வந்ததன் முக்கிய நோக்கங்கள் 2 எழுதுக.
2. ஒல்லாந்தருடன் சண்டையிட்ட கண்டி இராச்சிய மன்னர்கள் நால்வரைக் குறிப்பிடுக.
3. ஒல்லாந்தர் இந்நாட்டிலிருந்து பெற்றுக் கொண்ட வர்த்தகப் பொருட்கள் 5 எழுதுக.
4. கி.பி 1638, 1766ம் ஆண்டு உடன்படிக்கைகளின் சரத்துக்கள் இவ்விரண்டைத் தருக.
5. ஒல்லாந்தருக்கும் கண்டி அரசர்களுக்குமிடையில் நல்லுறவு நிலவிய சந்தர்ப்பங்கள் 3 தருக.
6. ஒல்லாந்தரது முக்கிய நீதிமன்றங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
7. ஒல்லாந்த கொமாண்டர் பிரிவுகள் மூன்றும் எவை?
8. தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு ஒல்லாந்தர் மேற்கொண்ட நடவடிக்கைகள் 3 எழுதுக.
9. பாடசாலை நிருவாகத்தின் பொருட்டு ஒல்லாந்தர் நியமித்த கமிஷன் எது?
10. ஒல்லாந்த ஆட்சியின் விளைவுகள் 4 தருக.

**2.** பொருத்தமான சொற்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து கீறிட்ட இடங்களை நிரப்புக.

(2ம் இராஜசிங்க, வில்லியம் பெர்க், ஜோரிஸ் பன் ஸ்பிள் பேகன், கோணப்பு பண்டார, ஜோன் பைபஸ், பிரெட்கன், கந்தளாய் குளம், ஸ்கொலாக்கல், புரட்டஸ்தாந்து)

1. கண்டி இராச்சியத்திற்கு முதன் முதல் சென்ற ஒல்லாந்தத் தூதுவன் ....................................
2. ''இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியது'' என்ற கூற்று ................................ மன்னனின் ஆட்சியின் பின்னர் புழக்கத்தில் வந்தது.
3. கி.பி 1766ம் ஆண்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் போது இருந்த ஒல்லாந்த ஆளுநர் .......................................
4. கல்வியில் ஈடுபட்டுள்ள ஒல்லாந்தக் குருமார் ....................................... என அறிமுகப்படுத்தப்பட்டனர்.
5. கறுவா உரிப்போர் ............................................ திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள்.

6. முதன்முதலில் கண்டி இராச்சியத்துக்கு வந்த ஆங்கிலத் தூதுவன் ......................................
7. பாடசாலையை நிருவகிக்கும் சபை .................................... கமிஷன் என அழைக்கப்பட்டது.
8. ஒல்லாந்தரால் புனரமைக்கப்பட்ட ஒரு குளம் ..................................
9. ஒல்லாந்தர் வருகையால் இந்நாட்டில் பரவிய சமயம் ...................................ஆகும்.

### 3. 'அ' பிரிவிற்குப் பொருத்தமானதை 'ஆ' பிரிவுடன் தொடர்புபடுத்தி சரியான இலக்கத்தை இடுக.

| | | |
|---|---|---|
| 1. தேசவழமைச் சட்டம் | ○ | வர்த்தக சங்கத்தின் ஏகபோக உரிமையாக விளங்கியது. |
| 2. பத்தேவியா | ○ | தென் இந்தியாவுடன் வணிகத் தொடர்பினை ஏற்படுத்தினர். |
| 3. ஒல்லாந்தரால் நீதிமன்றங்கள் | ○ | எனும் மூன்று முக்கிய துரத்தப்பட்ட கத்தோலிக்கர் |
| 4. கறுவா வியாபாரம் | ○ | சிங்கள வரலாற்றில் மிகவும் கேவலமான உடன்படிக்கை |
| 5. கண்டி இராச்சிய நாயக்க மன்னரின் உறவினர் | ○ | வடக்கில் தமிழ் மக்களுக்கு பொருத்தமானது |
| 6. றாத் வான் ஜஸ்டி | ○ | ஒல்லாந்த நிருவாகப் பிரிவு |
| 7. கொமாண்டரி | ○ | சீயத்திலிருந்து உபசம்பதா பிக்குகளை வரவழைத்தான். |
| 8. கி.பி 1766 உடன்படிக்கை | ○ | ஒல்லாந்தரின் கீழைத்தேச மத்திய நிலையம். |
| 9. கி.பி1753ல் கீர்த்திஸ்ரீ இராஜசிங்கன் | ○ | ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திர சிங்கன். |
| 10. இறுதிச் சிங்கள மன்னன் | ○ | வஹகோட்டை முதலான கண்டி இராச்சியப் பிரதேசங்களில் குடியேறினர். |

**சாரம்சம்**

கறுவா உள்ளிட்ட வாசனைத் திரவியங்களை பெற்று வியாபாரம் செய்து இலாபமீட்டும் நோக்குடனே ஒல்லாந்தர் இலங்கை வந்தனர். அதற்காக அவர்கள் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியை அமைத்துச் செயற்பட்டனர்.

போர்த்துக்கேயரை இலங்கையின் கரையோரப் பிரதேசத்திலிருந்து விரட்டுவதற்காக கண்டியரசர்கள் ஒல்லாந்தரின் உதவியை நாடிய போதிலும் ஒல்லாந்தருக்கு கரையோர நிர்வாகத்தை வழங்குவது அவர்களது நோக்கமாக இருக்கவில்லை. ஒல்லாந்தர் கரையோரப் பகுதிகளை கைப்பற்றிய சந்தர்ப்பங்களில் கண்டியரசர்கள் அவர்களுக்கு எதிராக போர்த் தொடுத்துள்ளனர்.

ஒல்லாந்தர் நம் நாட்டில் நிலவிய நிர்வாக முறைகளுடன் அவர்களின் முறையொன்றினையும் இங்கு அறிமுகப்படுத்தினர். பிரதேச நிர்வாகம், சட்டமும், நீதியும், கல்வி எனும் துறைகளில் தெளிவான மாற்றங்களை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கையின் சமூகவமைப்பு மற்றும் கட்டடக்கலை, தளபாடம், ஆடையணிகலன், சமயம் ஆகிய பல்வேறு துறைகளிலும் ஒல்லாந்தரின் செல்வாக்கைக் காண முடிகின்றது.